பக்கங்கள் 12+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 26 சனிக்கிழமை 13.12.2025 | அதிர்வு 136

## "பேஸ்புக்" களியாட்டம்: 26 பேர் அதிரடி கைது!



தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மாகாண சபைத் தேர்தல் பற்றி ஆராய விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு!



மாகாண சபைத் தேர்தலை எந்த முறை மையின் கீழ் நடத்துவது என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு வொன்றை நியமிப்பதற்கான யோசனை விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது. சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட் டுள்ள இந்த யோசனை நாடாளுமன்றத் தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப் பட்டுள்ளது. 02

# மலையகத் தமிழ் உறவுகளுக்கு வடக்கு - கிழக்கு துணை நிற்கும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"அண்மைய இயற்கை அனர்த்தம் மலையகப் தமிழ் உறவுகளைப் புலம்பெயரச் செய்துள்ளது. அவர்களுக்கான வாழ்விடங்களையும் வாழ்வா தாரங்களையும் உருவாக்க அரசு தவறினால் அவர்களை அரவணைத்துப் பாதுகாப்பதில் வடக்கு - கிழக்கு முன்னிற்கும். எப்பொழுதும் போலவே வடக்கு - கிழக்கு என்றும் மலையகத் தமிழர்களுக்குத் துணை நிற்கும்."

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று விடுத் 02



# மலையகத்தில் பாதுகாப்பான காணி பெற அரசுடன் இணைந்து செயற்பட நாம் தயார்

## மனோ கணேசன் எம்.பி. அறிவிப்பு

''மலைநாட்டில் இந்தப் பேரவலத்துக்குப் பின்னர் எழுந்துள்ள, "பாதுகாப்பான வதிவிட காணி" என்ற உரிமை கோரிக்கையை அரசுடன் உரையாடி பெற அரசில் அங்கம் வகிக்கும் மலையகப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இணைந்து செயற்படத் தயார்." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

"நமது மலையக சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூக பிரச்சினையை, மனதில் கொண்டு, இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்குப் பாதுகாப்பான வதிவிடக் காணிகளை அரசிடம் 02



## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி பெறுவோம்." – என்றும் மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது"–

"இதற்கு முன் நடைபெற்ற அவலங்களை விட இந்த முறை அவலம் அவதானத்துக்கு உரியது என நான் நம்புகின்றேன். ஏறக்குறைய பெரும்பாலான மலைப் பகுதிகளிலும் மலைப் பாறைகள், மலை மேடுகள், தரை நிலங்கள் வெடித்துள்ளன. இடைவெளிகளில் நீர் வெளியேறுகின்றன. இது இயற்கை அனர்த்தம். சிலர் கூறுவதைப் போன்று இவற்றைக் கொங்ரீட் போட்டு ஓட்ட முடியாது. இவை இயற்கை நில வெடிப்பு.

மலைநாட்டில், மலை உச்சி, மண் சரிவு அபாயங்களை உடனடியாக எதிர்கொள்ளும் பிரிவினர் இருக்கின்றார்கள். இவர்களின் பிரச்சினை, சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப பிரச்சினை. இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்குப் பாதுகாப்பான வதிவிடக் காணிகளை அரசிடம் அவசரமாகக் கோருவோம்.

இது தொடர்பில் ஜனாதிபதி தோழர் அநுரகுமார திஸாநாயக்கவுடன் நான் கடந்த வாரம் நேரடியாக நாடாளுமன்றத்தில் உரையாடியுள்ளேன்.

பாதீட்டின் இறுதி நாளன்று, எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து வெளிநடப்பு செய்யாமல், ஜனாதிபதியின் உரையைச் செவிமடுத்தேன். இனிமேல் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களிலேயே குடியமர்த்தப்படுவார்கள் என அவர் சபையில் தனது உரையில் கூறியதை நேரடியாகப் பாராட்டி, அதே அவகாசம் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தினேன்.

அதன் பின், நமது எம்பீக்களும், நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகக் கருத்துக் கூறி ஜனாதிபதியின் கவனத்துக்குக் காணிப் பிரச்சினையை மீண்டும் கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே, இன்று இது தேசிய பிரச்சினையாக மாறவுள்ளதை இனிமேல் எவரும் மறுக்க முடியாது.

பேரவலத்தை அடுத்து, நான் பல இடங்களுக்கு எனது கட்சிக் குழுவினருடன், நிவாரண பொருள் உதவிகளுடன், கண்காணிப்பு பயணங்கள் மேற்கொண்டேன். நான் போன பல இடங்களில், கண்டி நாவலபிட்டிய கங்க –இஹல – கோரள – அலுகொல்ல மலை உச்சி தோட்டம், மிகவும் ஆபத்து நிறைந்த பூமியாக என் மனதில் நிற்கின்றது. அங்கே அநாதரவாக இருந்த மக்களுக்கு, நாம் விநியோகித்த, உடனடி நிவாரணத்தைப் பெற்றுக்கொண்ட அவர்கள் தம் வாழ்விட பரிதாப நிலையை எனக்குக் கூறினார்கள். நான் அந்த மலை உச்சியில் மலையேறி நடக்கும் போதே, என் கால்களுக்குக் கீழே, தரை பிளந்து, உள்ளே இருந்து நீர் பீறிட்டு வெளியே வருவதை என் கண்களால் கண்டேன். மீண்டும் ஒரு மழையோ, மண்சரிவோ வருமானால், கீழே உருண்டு வரத் தயாராக இருக்கும், பாறைகளையும், உயர்ந்த மண்மேடுகளையும் கண்டேன். இதைவிட என்ன பரிதாபம் இருக்க முடியும்?

பாதுகாப்பான மாற்றுக் காணிகள் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுவும் அவசரமாக முன்னுரிமை அடிப்படையில் நடைபெற வேண்டும். ஆகவே, அரசியல் கட்சி, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, பேதங்களுக்கு அப்பால் இந்த விடயத்தில் நாம் ஒன்றுபட்டுச் செயற்பட்டு, நமது சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூகப் பிரச்சினையை, மனதில் கொண்டு, இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்குப் பாதுகாப்பான வதிவிட காணிகளை அரசிடம் கோரி பெறுவோம்." – என்று மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலப்புத் தேர்தல் முறைமை, வாக்களிக்கும் உரிமை மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட தேர்தல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு விரிவான விவாதங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தநிலையில், தெரிவுக்குழுவின் அறிக்கை அதன் முதல் கூட்டத் தினத்திலிருந்து மூன்று மாத காலத்துக்குள் அல்லது நாடாளுமன்றத்தால் நீடிக்கப்பட்ட காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடத்தில் நடத்துவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலையகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

"அண்மையில் முழு நாட்டையும் புரட்டிப் போட்ட டித்வா சூறாவளி, மலையகத்தை வழக்கம் போலவே சூறையாடிச் சென்றுள்ளது. நாளைய விடியல் குறித்தும் எதிர்காலம் குறித்தும் பல்வேறு கனவுகளுடனும் இருந்த ஏராளமானோரை நொடிப்பொழுதில் காவுகொண்டு மண்ணுக்கடியில் புதைத்தது. உறவுகள் இருக்கின்றார்களா? அவர்கள் நலமுடன் இருப்பார்களா என்று ஏக்கப் பெருமூச்சு விடும் நிலைக்கும் எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்கும் நிலைக்கும் இயற்கை அந்த மக்களை வஞ்சித்துள்ளது. இலங்கையில் தமிழனாக இருப்பவர்கள் அனைவரும் துன்பப்படத்தான் வேண்டுமோ என்று நினைக்கும் அளவுக்கு இம்முறை மலையகத் தமிழர்களையும் வடக்கு – கிழக்கு தமிழர்களையும் டித்வா புரட்டிப் போட்டுள்ளது.

இந்த டித்வா சூறாவளியால் மலையகத்தில் எழுநூறுக்கும் மேலான மக்கள் நிலச்சரிவுகளில் அகப்பட்டு மண்ணுக்குள் புதையுண்டு இறந்துள்ளனர்.

முன்னரும்கூட இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றாலும் இப்பொழுது இது மிகவும் பாரதூரமான அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்குப் பாரிய அளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பெருந்தோட்ட உறவுகள் 250 வருடங்களாக சொந்த நிலமின்றி, சொந்த வீடின்றி, அல்லலுறும் நிலையையே இதுவரை நாங்கள் பார்த்து வருகின்றோம்.

இலங்கையில் அவ்வப்போது ஏற்படும் இனப்படுகொலைகளின்பொழுது மலையகத் தமிழர்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு புகலிடம் தேடி வடக்கு – கிழக்கில் குடியேறியுள்ளனர். 1977, 1981 மற்றும் 1983 காலப்பகுதிகளில் இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் வடக்கு – கிழக்கில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் குடியேறியுள்ளனர். அவர்கள் இன்று தங்களுக்கான காணிகளுடனும் வீடுகளுடனும் இருப்பதுடன் கல்வியிலும் மேம்பட்டு தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்த உடன் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தினூடாக, ஒருபகுதி மக்கள் இந்தியா சென்றுவிட மறுபகுதியினர் இலங்கையில் தங்கினர். அவ்வாறு இலங்கையில் இருந்தவர்களுக்குக்கூட முழுமையான வாக்குரிமை மற்றும் குடியுரிமையைக் கொடுக்க இலங்கை அரசுகள் மறுதலித்தே வந்தன.

1985ஆம் ஆண்டு, இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் நடைபெற்ற திம்பு பேச்சின்போது, தமிழர் தரப்பினர் நான்கு முக்கியமான கோரிக்கையை முன்வைத்தனர். அதில் ஒன்று இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்து மலையகத் தமிழ் மக்களுக்கும் வாக்குரிமை, குடியுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இதன் பின்னர், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் பேசி, அம்மக்களுக்கான வாக்குரிமை, குடியுரிமை என்பன வழங்கப்பட்டன. ஆனால், இன்றும் அவர்களில் பெரும்பாலானோர் காணி உரிமை அற்றவர்களாகவும் எவ்வித முன்னேற்றமும் அற்றவர்களாகவும் தேயிலைத் தோட்டத்தின் லயன்களில் வசிப்பவர்களாகவுமே இருக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் இயற்கை அனர்த்தங்களால் அந்த மக்கள் தொடர்ச்சியாக தமது உயிரை அர்ப்பணித்து வருவதானது, ஏற்புடைய விடயமல்ல. ஆகவே, எமது பெருந்தோட்ட உறவுகளுக்கு இலங்கை அரசாங்கம், மலையகத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களை வழங்கி, இயற்கை அனர்த்தத்திலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் வடக்கு – கிழக்கில் அந்த மக்கள் குடியேறி வாழ விரும்புகின்ற சூழ்நிலையில், அதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும்

(04ஆம் பக்கம் பார்க்க)

ஒன்றாக
முன்னோக்கி

## மலையகத்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கத் தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர்.

முன்னர் ஏற்பட்ட இனக்கலவரங்களின் பொழுதும் வடக்கு – கிழக்குக்குத் துறத்தப்பட்ட எமது உறவுகளை வரவேற்று உபசரித்து அவர்கள் அச்சமின்றி வாழக்கூடிய அடிப்படையில் காணிகளை வழங்கி, தேவையான உதவிகள் செய்யப்பட்டு, அவர்கள் மனிதர்களாக வாழக்கூடிய சூழ்நிலையை வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அரசு எவ்வித உதவியையும் செய்யாமலேயே தமிழ்த் தொண்டு நிறுவனங்களும் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

மலையக உறவுகள் வடக்கு – கிழக்கில் குடியேற விரும்பும் பட்சத்தில் புலம்பெயர் தேசத்தில் வசிக்கின்ற மக்களின் காணிகளை மட்டுமன்றி, அவர்களின் தேவையின் அடிப்படையில் காணிகளை வழங்கி, அவர்கள் நிரந்தரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான நடவடிக்கைகளை தமிழ் தரப்புகள் மேற்கொள்ளத் தயாராகவே இருக்கின்றனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்களிப்பும் மகத்துவமானது. மலையக மக்கள் வடக்கு – கிழக்கில் குடியேறுவது புதியதுமல்ல. அவர்களுக்கு இந்தப் பிரதேசம் அந்நியமானதுமல்ல.

இந்த நாட்டில் மாறிமாறி வந்த அரசுகள் மேற்கொண்ட இனப்படுகொலைகளின் காரணமாகவே மலையக மக்கள் புலம்பெயர்ந்து வடக்கு – கிழக்குக்கு வந்தார்கள். போர் காரணமாக வடக்கு – கிழக்கிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். ஆகவே, புலம்பெயர்தல் என்பது வடக்கு – கிழக்கிலும் மலையகத்திலும் நடைபெற்றுக்கொண்டே வந்துள்ளது. இப்பொழுது இயற்கை அனர்த்தம் அவர்களைப் புலம்பெயரச் செய்துள்ளது. அவர்களுக்கான வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் உருவாக்க அரசு தவறினால் அவர்களை அரவணைத்துப் பாதுகாப்பதில் வடக்கு – கிழக்கு முன்னிற்கும்.” – என்றுள்ளது.

## ‘பேஸ்புக்”..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் நடைபெற்ற ‘பேஸ்புக் விருந்து’ ஒன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், போதைப்பொருள்களுடன் 26 பேரைக் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை, இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதில் 22 இளைஞர்களும் 4 யுவதிகளும் அடங்கினர். கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 31 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் 21 முதல் 26 வயதுக்குட்பட்ட யுவதிகள் ஆவர்.

அவர்கள் கண்டி, முல்லேரியா, ஹட்டன், பிலகல, அத்துருகிரிய, கொட்டகெதர, ஹோமாகம, தொம்பே, எம்பிலிப்பிட்டிய, திருகோணமலை மற்றும் ஜா – எல உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருட்கள் மற்றும் சட்டவிரோத பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், தெல்தெனி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர்.

சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சிறுபிள்ளைத்தனம்

“என்ன இது சின்னப் புள்ளத்தனமா இருக்கு...?’- இது நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் மனதைக் கவர்ந்த ஹாஸ்ய வசனங்களில் ஒன்று.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின்(மொட்டுக் கட்சியின்) செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது முன்வைத்த கோரிக்கை ஒன்று வடிவேலுவின் இந்த நகைச்சுவை வசனத்தைத் தான் மனதில் நெருடலாக உருவாக்கியது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் என்ற முறையில் அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

“பேரிடர் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தகவல் கிடைத்தும் அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்புகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இது விடயத்தில் தனது இயலாமை மற்றும் கவனயீனத்தை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அத்துடன், அரசாங்கப் பலத்தை பயன்படுத்தி தமது தரப்பில் இழைக்கப்பட்ட தவறை மறைப்பதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை முன்வைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியிடம் கோருகின்றோம். அவ்வாறு கொண்டு வந்தால் எங்கு தவறிழைக்கப்பட்டது என்பது உட்பட அனைத்து தகவல்களும் தெரியவரும். தேசிய மக்கள் சக்தியில் மனசாட்சியின் பிரகாரம் செயல்படும் எம்.பிக்களும் அதனை ஆதரிக்கக்கூடும். அப்போது அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் ஆட்டம் காணும்.” என்றெல்லாம் அவர் அரசியல் பிதற்றல் நிகழ்த்தியிருக்கின்றார்.

ஜனாதிபதிக்கு எதிராக இவ்வளவு சுலபமாக- அதுவும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அட்சர கணித எண்ணிக்கையின் பின்னணியில் - குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது பற்றி சிந்திக்கவே முடியாது என்பது சட்டத்தரணியான மொட்டுக் கட்சியின் செயலாளருக்குத் தெரியாமல் போனது விசனத்துக்குரியது.

ஜனாதிபதிக்கு எதிரான ஒரு குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்வதா என்ற விடயத்தை சபாநாயகர் பரிசீலிப்பதற்கே குறைந்தபட்சம் அந்தப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் அரைவாசி உறுப்பினர்களுக்குக் குறையாமல் (அதாவது 113 எம்.பிக்களுக்குக் குறையாமல்) ஒப்பமிட்டிருக்க வேண்டும். அப்படியான சந்தர்ப்பத்தில் கூட அந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் பரிசீலனைக்கு விடலாமா என்று தீர்மானிப்பது சபாநாயகரைப் பொறுத்தது. அதை அவர் ஏற்கலாம் அல்லது விடலாம். அது அவரது தன்னிச்சையான தீர்மானத்துக்குரியது. நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அத்தகைய பிரேரணைக்கு ஆதரவாக ஒப்பமிட்டிருந்தால் மட்டுமே அதனைக் கட்டாயம் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் எடுத்தாக வேண்டும்.

ஆனால் இப்போது மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட வலிமையான பலத்தோடு தேசிய மக்கள் கட்சி அரசு மிக உறுதியான நிலையில் உள்ளது. இந்தச் சமயத்தில் ஜனாதிபதிக்கு எதிரான ஒரு குற்ற விசாரணைப் பிரேரணைக்கு மூன்றில் ஒரு பங்கு எம்.பிக்களின் ஆதரவைக் கூட எதிர்க்கட்சிகளினால் திரட்ட முடியாது.

இந்தச் சமயத்தில் ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வருவது குறித்து எதிர்க்கட்சியில் இருந்து ஒரு முக்கிய பிரமுகர் பகிரங்கமாக கருத்து வெளியிடுவது அரசியலில் சின்னப்பிள்ளைத்தனமாகவே தோன்றுகின்றது.





# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பாரம்பரிய கண்காட்சி

(நவாஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் பாரம்பரிய உணவுக் கண்காட்சி மற்றும் பாரம்பரிய பொருள்கள் கண்காட்சியை நடத்தியது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி மேனகா புவிக்குமாரின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஜனாப் தௌபீக்கின் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ஜனாப் அன்சார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவாட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கடற்படையின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு இரத்ததான நிகழ்வுகள்







(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை முயற்சிகளை உள்ளடக்கிய தொடர்ச்சியான மத, சுற்றுச்சூழல் மற்றும் சமூக சேவை திட்டங்களை கடற்படை ஏற்பாடு செய்துள்ளது. இதன் கீழ், கடற்படையின் மற்றொரு சமூக சேவையாக 2025 டிசெம்பர் 07ஆம் திகதி திருகோணமலை நிலாவெளியில் ஒரு சமூக சுகாதார மருத்துவ சேவையும் இலங்கை கடற்படைக் கப்பல் நிபுணவின் கடற்படை மருத்துவமனை வளாகத்தில் இரத்ததான நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை நிலாவெளி பகுதியில் நடைபெற்ற இந்த சமூக சுகாதார மருத்துவ மனையில் கலந்து கொண்ட மக்களுக்கு, கிழக்கு கட்டளை மருத்துவ ஊழியர்கள், திருகோணமலை லயன்ஸ் கிளப்பின் ஆதரவுடன், தொற்றா நோய் பரிசோதனைகள், குழந்தை சுகாதார பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகளை நடத்தினர்.

கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நிபுண நிறுவனத்தின் கடற்படை மருத்துவமனை வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான திட்டம், காலி, கராப்பிட்டி தேசிய மருத்துவ மனையின் இரத்த வங்கியுடன் ஒருங்கிணைந்து, அந்த வங்கியின் இரத்த இருப்புக்களை முறையாக பராமரிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. தெற்கு கடற்படை கட்டளையைச் சேர்ந்த ஏராளமான கடற்படை வீரர்கள் தன்னார்வத் தொண்டு செய்து அதற்கு பங்களித்தமையும் குறிப்பிடத்தக்கது.





# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.எஸ்.ஆர்.சியின் இலவச மருத்துவ முகாம்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனம் இலங்கையில் பல தசாப்தங்களாக மனிதாபிமான, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. அதன்படி அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் வகையில் தனது அவசர உதவி நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது.

இதன் ஒரு பகுதியாகப் பல பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனம் அரச சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து இந்த இலவசமருத்துவமுகாம்களை நடத்தி வருகிறது. இதன் மூலம் பாதிப்பு அதிகம் ஏற்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளதாக அந்த நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் பணியாற்றிவரும் ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனம் நீர் மற்றும் சுகாதார சேவைகள், கல்வி உதவி, வீட்டுத்திட்டம், அனாதை பராமரிப்பு, வாழ்வாதாரம், மற்றும் பருவகால நிவாரணங்கள் போன்ற துறைகளில் சேவைகளை வழங்கி வருகிறது.

ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் திட்டமிடலின் படி, திட்டமிடப்பட்ட 14 இலவச மருத்துவ முகாம்களில் பத்து முகாம்கள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. இவை அனைத்தும் புத்தளம் மாவட்டத்தின் பல பகுதிகளில் நடத்தப்பட்டன

இவ் இலவச மருத்துவ முகாம்களில் மருத்துவ பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, சுகாதார வழிகாட்டுதல், காயங்களுக்கு மருந்து கட்டுதல் மற்றும் இலவச மருந்துகள் வழங்குதல் போன்ற சேவைகள் இடம்பெற்றன.

இதுவரை பத்து மருத்துவ முகாம்களின் மூலம் சுமார் நான்காயிரம் நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதன்படி அஷ்ரஃபிய்யா அரபுக்கல்லூரி, மணல்குன்று, அசன் குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலயம், வெட்டாளை, மஸ்ஜிதுல் ஹசனாத் ஜும்ஆ பள்ளிவாசல், அல்ஜித்தா, தில்லையடி, ஐ.எஸ்.ஆர்.சி. அலுவலகம், நுரைச்சோலை, ஜி.ஆர்.எஸ். தமிழ் வித்தியாலயம், ஏத்தாளை, கண்டக்குளி அவசர குடியேற்ற முன்பள்ளி, எளுவன்குளம் எம்.எம்.வி., வனாத்தவில்லுவ, கரம்பை ஹுசைனியாபுரம், பலாவி நாகவில்லு, புத்தளம் செவ்வந்தீவு ஆகிய இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

மேலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மருத்துவ முகாம்கள் டிசெம்பர் மாதம் 14 முதல் 17 வரை முந்தல், கருவலகஸ்வெவ, ஆராச்சிக்கட்டுவ மற்றும் நாத்தாண்டி ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளன என்று ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

அரச சுகாதாரத் துறைகள், மருத்துவக் குழுக்கள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புக்கு ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இயற்கைப் பேரிடர்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நீண்டகால மனிதாபிமான உதவிகளை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கமாக இருப்பதாக ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் எச்.எம். அஷான் மேலும் தெரிவித்துள்ளார்.

# தகரக் கொட்டில், குடிசை வீடுகளில் வாழும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்நிலப் பகுதியில் தகர கொட்டில்கள், குடிசை வீடுகளில் வாழும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் என்று ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

செங்கலடி ஏறாவூர்ப் பற்று மணியபுரம், ஐயன்கேணி கிராமங்களில் சூறாவளி, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

நாடு பூராகவும் ஏற்பட்ட மிக மோசமான அழிவுகளுக்காக நிவாரணங்களை வழங்கும் அரசு மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்களின் பாதிப்புகள், தொழில் இழப்புகள் மற்றும் வாழ்வாதாரத்துக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செங்கலடி தளவாய் வட்டாரத்தில் உள்ள சில குடும்பங்களையும் அவர்களது இடங்களையும், நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்டேன். உண்மையில் மிகவும் வேதனையாக உள்ளது.– என்றார்.



# வீடுகளைத் திருத்தம் செய்ய கிழக்கில் நிதி வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையால் வீடு புனரமைத்தல் மற்றும் திருத்தப் பணிகளுக்காக வழங்கப்படும் 2 லட்சம் ரூபா நிதி உதவி, பயனாளர்கள் 33 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால்ரட்ண சேகர தலைமையில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வழங்கப்பட்டது.

இந்த நிதி மூன்று கட்டங்களாக பயனாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது இருப்பிட வீட்டு வசதிகளை மேம்படுத்த ஒரு சாதகமான திட்டமாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் ஜீ.சுகுமாரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# கிராம உத்தியோகத்தர்கள் பக்கச் சார்பாக செய்படுகின்றனர்!

## நாகர்கோவில் மக்கள் விசனம் தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

கிராம உத்தியோகத்தர்கள் பக்கச் சார்பாக செய்படுகின்றனர் என்று நாகர்கோவில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது இலங்கையின் பல்வேறு பகுதிகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

அதன் அடிப்படையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களில் முதன்மையாக நாகர் கோவில் பகுதி பகுதி காணப்படுகிறது.

இந்தக் கிராமத்தில் பணி புரியும் கிராம உத்தியோகத்தர் பக்க சார்பாக செயற்படுகின்றார் என்றும் சில பாதிக்கப்பட்ட வீடுகளை இதுவரைக்கும் கிராம உத்தியோகத்தர் வந்து பார்வையிடவில்லை எனவும் நாகர் கோவில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மற்றும் தமக்கு இதுவரைக்கும் எந்த நிவாரண பொதிகளும் கிடைக்கவில்லை எனவும் தாம் முழுமையாக வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் எனவும் இதுவரைக்கும் தமது இல்லத்தில்



வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் தாம் அன்றாட வாழ்வில் சமையல் நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் உள்ளனர் என்றும் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தை உடனடியாகக் கருத்தில் கொண்டு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.



# மூதூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கல்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஆதிபராசக்தி அறப்பணி மன்றத்தால் நேற்று வெள்ளிக்கிழமை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலையின் மூதூர் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

ஆதிபராசக்தி அறப்பணி மன்றத்தின் போசகர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதனின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, ஆதிபராசக்தி அறப்பணி மன்றத்தின் தலைவர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மூதூர் பிதேச குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், அறப்பணி மன்றத்தின் பொதுச் செயலாளர் இரா.இராகுலன், பொருளாளர் ச.சாந்திமலர், வரோதய நகர் பொறுப்பாளர் மீனலெட்சுமி, சமூக செயற்பாட்டாளர் கரன் மற்றும் சேனையூர் நிரோஜினி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த உதைபந்தாட்ட வீரர் பலி!



(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட இரணைப்பாலை வீதியில் கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த உதைபந்தாட்ட வீரர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், இரணைப்பாலையைச் சேர்ந்த 31 வயதுடைய அன்ரன் செல்வராசா திலைக்சன் ஆவார். அவர் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட வீரராகவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் உதைபந்தாட்ட நடுவராகவும் செயற்பட்டு வந்த சிறந்த விளையாட்டு வீரர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9ஆம் திகதி இரணைப்பாலை வீதியில் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த திலைக்சன், அதே வீதியால் பயணித்த கனரக வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்தில் கடுமையாக காயமடைந்த அவர் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனமும் அதன் சாரதியும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வீதி போக்குவரத்து பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி 10 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




# கல்முனையில் இந்திய நிவாரண பொதியிடலை அம்பாறை அரச அதிபர் நேரில் பார்வையிட்டார்

(வி.ரி.சகாதேவராஜா)

இந்தியா தமிழக முதல்வரின் ஏற்பாட்டில் அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கிய பேரிடர் நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதற்கான பொதியிடலை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

குறிப்பாக கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கான பொதியிடல் நடைபெறுவதை அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார்.

மாவட்ட செயலாளரின் விஜயத்தின் போது கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ் மற்றும் மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரிகள் குழுவினர் உடன் வருகை தந்திருந்தனர்.

அதேவேளை, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கல்முனையின் பல பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு விஜயம் செய்த சிந்தக்க அபேவிக்கிரம வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.




# நுவரெலியா பகுதி வீதிகளில் இரவில் பயணிக்க வேண்டாம்

## மாவட்ட செயலாளர் அறிவுறுத்து

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியாவுக்குள் பிரவேசிக்கும் எந்தவொரு வீதியிலும் இரவு வேளையில்வாகனங்களைச்செலுத்தவேண்டாம் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் சாரதிகளிடம் இந்த அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டிருந்த கம்பளை - நுவரெலியா பிரதான வீதியின் கட்டுகித்துல பகுதியில் மீண்டும் மண்மேடு சரிந்து வீதி தடைப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மாவட்ட செயலாளர், நிலவும் சீரற்ற வானிலைக் காரணமாகத் தொடர்ந்தும் வீதிகளில் மண்மேடுகள் சரியும் அபாயம் காணப்படுவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

'டித்வா' புயலால் நுவரெலியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான உணவுப் பொருட்கள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், அரசை அசௌகரியத்துக்குள்ளாக்கும் நோக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத சில தரப்பினர் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# கேரள நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல்: 6 குற்றவாளிகளுக்கும் 20 ஆண்டுகள் சிறை



கேரள நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த வழக்கில் பல்சர் சுனி உள்ளிட்ட 6 குற்றவாளிகளுக்கும் 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து எர்ணாகுளம் முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் அங்கமாலி அடுத்த அத்தாணி பகுதியில் கடந்த 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி பிரபல நடிகை ஒருவர் படப்பிடிப்பு முடிந்து வாகனத்தில் சென்றுள்ளார். பின்னால் காரில் வந்த ஒரு கும்பலைச் சேர்ந்தவர்கள், வாகனத்தை தடுத்து நிறுத்தி, அதன் உள்ளே அத்துமீறி நுழைந்து நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து நடிகை அளித்த புகாரின் பேரில், கேரள மாநில குற்றப் புலனாய்வு பொலிஸார் விசாரணை நடத்தினர். பல்சர் சுனி என்ற சுனில் குமார் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டனர். சிறையில் இருந்தபோது பல்சர் சுனி எழுதிய கடிதத்தின் அடிப்படையில் பிரபல மலையாள நடிகர் திலீப்பும் கைது செய்யப்பட்டார். நடிகையுடன் ஏற்கெனவே இருந்த முன்விரோதம் காரணமாக, திலீப் சதித்திட்டம் தீட்டி கும்பலை ஏவி, நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்தார் என புகார் கூறப்பட்டது. திலீப் கைதுசெய்யப்பட்டார். 85 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு, பிணையில் விடுவிக்கப்பட்டார். இதை தொடர்ந்து, நடிகர் திலீப், பல்சர் சுனி உட்பட மொத்தம் 9 பேர் மீதுகுற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது.

மலையாள நடிகை காவ்யா மாதவன் - திலீப் இடையிலான உறவு குறித்து திலீப்பின் மனைவியான மஞ்சு வாரியரிடம் இன்னொரு நடிகை கூறியுள்ளார். இதனால் கோபமடைந்த மஞ்சு வாரியர், திலீப்பிடம் இருந்து விவாகரத்து பெற்று பிரிந்து சென்றுவிட்டார். மனைவி பிரிந்ததற்கு அந்த நடிகைதான் காரணம் என்று கருதிய திலீப், கூலிப்படையை பயன்படுத்தி அவரை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியுள்ளார். பல்சர் சுனி இதற்கு உறுதுணையாக இருந்துள்ளார் என்று குற்றப்பத்திரிகையில் பொலிஸார் பதிவு செய்திருந்தனர்.

எர்ணாகுளம் முதன்மை நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை சுமார் 8 ஆண்டுகளாக நடந்தது. விசாரணையின்போது, பொலிஸ் தரப்பில் ஆஜரான 28 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறினர்.

வழக்கு விசாரணை முடிந்த நிலையில், நீதிபதி ஹனி எம்.வர்கீஸ் கடந்த டிசம்பர் 8 ஆம் திகதி தீர்ப்பு வழங்கினார். நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த வழக்கில் நடிகர் திலீப் மீதான குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி அவரை நீதிபதி விடுதலை செய்தார். திலீப்பின் நண்பர் சரத், மேஸ்திரி சனில் ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர். பல்சர் சுனி, மார்ட்டின் ஆன்டனி, பி.மணிகண்டன், பிரதீப், விஜேஷ், வடிவால் சலீம் ஆகிய 6 பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில், 6 பேருக்கான தண்டனை விவரத்தை நீதிபதி ஹனி எம். வர்கீஸ் நேற்று அறிவித்தார். இதையொட்டி, குற்றவாளிகள் 6 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

'வயதான பெற்றோர், மனைவி, குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் அப்பாவிகள்' என்று பலவித காரணங்களைக் கூறி நீதிமன்றம் தங்களை மன்னிக்குமாறு 6 பேரும் கோரினர். ஆனால், அரசுத் தரப்பு வழக்கறிஞர் அஜாக்குமார் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

"இதுபோன்ற குற்றவாளிகளுக்கு கருணை காட்டக் கூடாது. நீதிமன்றம் அளிக்கும் தண்டனை, இந்த சமூகத்துக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்" என்று வாதிட்டார்.

இதையடுத்து, தீர்ப்பு விவரங்களை நீதிபதி ஹனி எம்.வர்கீஸ் அறிவித்தார். "சதித் திட்டத்தில் ஈடுபட்ட அனைத்து குற்றவாளிகளும் குற்றங்களுக்கு சமமாகப் பொறுப்பேற்கின்றனர். எனினும், பல்சர் சுனி மட்டுமே உண்மையில் பாலியல் வன்கொடுமை செய்தார் என்ற உண்மையை கணக்கில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்த நீதிபதி, 6 குற்றவாளிகளுக்கும் 20 ஆண்டு கடுங்காவல் தண்டனை, தலா 50 ஆயிரம் இந்திய ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். பாலியல் கூட்டுவன்கொடுமை உள்ளிட்ட குற்றங்களுக்காக இந்த தண்டனை வழங்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார்.

# காற்று மாசு பிரச்சினை தொடர்பில் மக்களவையில் விவாதிக்க தயார்

## அமைச்சர் கிரண் ரிஜிஜு வாக்குறுதி

டில்லி உட்பட பல்வேறு நகரங்களின் காற்று மாசு பிரச்சினை குறித்து மக்களவையில் விவாதிக்க தயார் என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் 10 ஆவது நாள் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. மக்களவை கூடியதும், மறைந்த முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீலின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் உயிரிழந்தவர்களுக்கு மக்களவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பின்னர், மதியம் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.



மக்களவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காற்று மாசு பிரச்சினையை எழுப்பினார். அவர் பேசும்போது, "டில்லி உட்பட பல்வேறு நகரங்களில் காற்று மாசு அதிகரித்து வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டு உள்ளனர். காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதற்கு நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பதில் அளித்தார். அவர் கூறும்போது, "காற்று மாசு தொடர்பாக அவையில் விவாதம் நடத்த காங்கிரஸும் எதிர்க்கட்சிகளும் யோசனை தெரிவித்துள்ளன. இதை ஏற்றுக்கொள்கிறோம்." என்று தெரிவித்தார்.

# அமெரிக்காவில் பட்டம் பெற்ற பின்னர் மாணவர்கள் நாடு திரும்புவது அவமானம்

## ட்ரம்ப் தெரிவிப்பு



அமெரிக்காவில் பட்டம் பெற்ற பிறகு இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாட்டு மாணவர்கள் நாடு திரும்ப வேண்டியிருப்பது அவமானம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்,

"உலகின் சிறந்த மாணவர்களில் சிலருக்கு அமெரிக்கா கல்வி அளித்து விட்டு, பட்டப்படிப்பை முடித்தவுடன் அவர்களைத் திருப்பி அனுப்புகிறது.

நீங்கள் அமெரிக்காவில் உள்ள கல்லூரியில் பட்டம் பெறுகிறீர்கள், பிறகு நீங்கள் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும், சீனாவுக்குத் திரும்ப வேண்டும், பிரான்ஸுக்குத் திரும்ப வேண்டும். அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்ப வேண்டும். இங்கு தங்குவது மிகவும் கடினம். இது ஒரு அவமானம்.

அமெரிக்காவின் தலைசிறந்த கல்லூரிகளில் இருந்து வரும் நபர்களை நிறுவனங்களால் வேலைக்கு அமர்த்த முடிவதில்லை. விசா நிச்சயமற்ற தன்மை காரணமாக, உயர்தரப் பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் சிறந்த சர்வதேசப் பட்டதாரிகளைத் தக்கவைத்துக்கொள்ள அமெரிக்க நிறுவனங்கள் சிரமப்படுகின்றன.

நல்ல கல்வித் தகுதிகள் இருந்தபோதிலும், சிறப்பாகச் செயல்படும் பல பட்டதாரிகள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வெளிநாட்டிலிருந்து வந்து படிக்கும் மாணவர்கள் சிலர் கல்லூரியில் முதலிடம் பெறுகிறார்கள், ஆனால் அவர்கள் நாட்டில் தங்குவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்த பிறகு பெரும்பாலும் வெளியே தூக்கி எறியப்படுகிறார்கள்." என்றும் அவர் கூறினார்.

வெளிநாட்டில் இருந்து குடியேறுபவர்கள் அமெரிக்காவில் வசிப்பதற்கும், குடியுரிமை பெறுவதற்கும் ஒரு புதிய வழியாக கோல்ட் கார்டு விசா திட்டத்தை சில நாட்களுக்கு முன்பு ட்ரம்ப் அறிவித்த நிலையில் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கோல்டு விசா தொடர்பாக இந்த நிகழ்வில் பேசிய ட்ரம்ப்,

"தற்போது கிரீன் கார்டு பெறுவது கடினம். அதே நேரத்தில் கோல்ட் கார்டு விசா நிறுவனங்களுக்கு அதிக உறுதியை வழங்கும். கோல்டன் விசா மூலமாக வார்டன், ஹார்வர்ட், எம்.ஐ.டி. மற்றும் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் ஸ்டெர்ன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் போன்ற முன்னணி கல்வி நிலையங்களிலிருந்து நிறுவனங்கள் நேரடியாக ஆட்களைப் பணியமர்த்தலாம்.

கோல்டன் விசா அட்டையை வாங்கி, உங்களுக்கு தேவையான சிறப்பான நபரை அமெரிக்காவில் தங்க வைக்க முடியும். இதுவும் கிரீன் கார்டு போன்றது தான், ஆனால் அதைவிட மிகவும் சிறந்தது, மிகவும் சக்தி வாய்ந்தது. இந்த கார்டை பெற அவர்கள் சிறந்த நபர்களாக இருக்க வேண்டும்.

இது அடிப்படையில் கிரீன் கார்டின் ஒரு மேம்பட்ட வடிவம். மேலும், உங்களால் இப்போது கிரீன் கார்டுகளைப் பெற முடியாது. அவற்றைப் பெறுவது சாத்தியமற்றது." என்று கூறினார்.

# ட்ரம்ப்பின் 'கோல்டு கார்டு' விசாவுக்கு எதிர்ப்பு: அமெரிக்காவின் 20 மாகாணங்கள் வழக்கு தாக்கல்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த புதன் கிழமை அறிமுகப்படுத்திய கோல்டு கார்டு விசா திட்டத்துக்கு தடை கோரி கலிஃபோர்னியா, நியூயோர்க் உள்பட 20 மாகாணங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன.

அமெரிக்காவில் உள்ள பெரு நிறுவனங்கள், திறன்மிகு வெளிநாட்டுப் பணியாளர்களை எச்1பி விசா மூலம் தங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தி வந்தன. இந்த விசாவுக்கான கட்டணம் 2,000 அமெரிக்க டொலர் முதல் 5,000 அமெரிக்க டொலர் வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 10 லட்சம் அமெரிக்க டொலர் அமெரிக்க குடியுரிமை பெறும் கோல்டு கார்டு விசா திட்டத்தை அதிபர் டொனால்டு ட்ரம்ப், வாஷிங்டனில் கடந்த புதன் கிழமை தொடங்கிவைத்தார்.

அப்போது பேசிய அவர், "அமெரிக்காவின் வார்ட்டன், ஹார்வர்டு, எம்ஐடி பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் இந்தியா, சீனா, பிரான்ஸ் உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், படிப்பை நிறைவு செய்த பிறகு அவரவர் சொந்த நாடுகளுக்கு திரும்புகின்றனர். புதிய கோல்டு கார்டு விசா திட்டத்தின் மூலம் வெளிநாடுகளை சேர்ந்த திறமையான மாணவ, மாணவியர் நிரந்தரமாக அமெரிக்காவில் தங்கி பணியாற்ற முடியும்.




இதன்மூலம் அமெரிக்காவுக்கு தேவையான திறன்வாய்ந்த பணியாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் கிடைப்பார்கள். அதோடு ரூ.9 கோடியில் கோல்டு கார்டு விசா பெறுவதன் மூலம் அமெரிக்க அரசின் கருவூலமும் நிரம்பும். சம்பந்தப்பட்ட அமெரிக்க நிறுவனங்களே விசா கட்டணத்தை செலுத்தி உயர்தொழில்நுட்ப திறன் வாய்ந்த வெளிநாட்டு பணியாளர்களை தக்கவைக்க முடியும்" என தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப்பின் இந்த திட்டத்தை எதிர்த்து கலிஃபோர்னியா, நியூயோர்க், மாசசூசெட்ஸ், இல்லினாய்ஸ், நியூ ஜெர்சி, வொஷிங்டன் உள்ளிட்ட மாகாணங்கள் பாஸ்டனில் உள்ள மத்திய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுக்களில் கூறப்பட்டிருப்பதாவது: எச்1பி விசா கட்டணம் 2,000 டொலர் முதல் 5,000 டொலர் வரை இருந்த நிலையில், தற்போதைய கோல்டு கார்டு திட்டத்தால் கட்டணங்கள் பல மடங்கு உயர்கின்றன. இவ்வாறு கட்டணத்தை விதிக்கும் அதிகாரம் அதிபருக்கு கிடையாது. இது மத்திய சட்டத்தை மீறும் செயல். விசா நடைமுறைகளை நிர்வகிப்பதற்கான செலவை ஈடு செய்யத் தேவையான கட்டணங்களை மட்டுமே குடியேற்ற அதிகாரிகள் வசூலிக்க முடியும்.

எச்1பி விசா திட்டம், அமெரிக்க நிறுவனங்கள் சிறப்புத் துறைகளில் வெளிநாட்டு ஊழியர்களைப் பணியமர்த்த அனுமதிக்கிறது. கலிஃபோர்னியாவில் தங்கள் தலைமையகத்தை அமைத்துள்ள பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள், எச்1பி விசா பெறும் ஊழியர்களை பெரிதும் சார்ந்துள்ளது. கோல்டு கார்டு விசாவுக்கு ஒரு மில்லியன் டாலர் கட்டணம் நிர்ணயிப்பது கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முக்கிய சேவைகளை வழங்குபவர்களுக்கு தேவையற்ற நிதிச் சுமையை உருவாக்கும். மேலும், இது தொழிலாளர் பற்றாக்குறையை மோசமாக்கி, சேவைகளை பாதிக்கும் அச்சுறுத்தல் உள்ளது என்று மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

சனிக்கிழமை | 13/12/2025

## மியான்மர் குடும்பத்தின் 9 வயது மகள் மரணம்

அகதிகள் குடும்பம் ஒன்று கனடாவுக்கு வந்து ஒரு மாதமே ஆன நிலையில் தங்கள் அன்பு மகளை இழந்துள்ள விடயம், அக்குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

மியான்மரில் இனப் 03▶






# பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 34 பேர் கைது

டொராண்டோவில் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 34 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிரேட்டர் டொராண்டோ பகுதியெங்கும் துப்பாக்கிகள் மற்றும் போதைப்பொருள்களை கடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒரு கும்பலை குறிவைத்து நடத்திய விசாரணையின் போது, 34 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ப்ரஹாம்பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02▶



# கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்துள்ள மாணவர்கள் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி

கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்துள்ள வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில், கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்துள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது.

2024ஆம் ஆண்டின் ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தைவிட, 2025 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்துள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை, 150,220 ஆக குறைந்துள்ளது.

கடந்த செப்டம்பரில் கனடாவில் கல்வி கற்க 28,910 பேர் விண்ணப்பித்த நிலையில், இந்த செப்டம்பரில் 11,390 புதிய மாணவர்கள் மட்டுமே கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்துள்ளார்கள். இது கடந்த ஆண்டைவிட 60 சதவிகிதம் குறைவாகும்.

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்தும் வகையில், கனடா அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

அவ்வகையில், கனடாவில் கல்வி கற்பதற்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் அனுமதிகளின் எண்ணிக்கையைக் குறைத்துவரும் கனடா அரசு, அடுத்த ஆண்டிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கவிருக்கும் கல்வி அனுமதிகளின் எண்ணிக்கையை குறைக்க முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# 6,000 பேருக்கு நிரந்தர வதிவிட உரிமத்திற்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுத்தது கனடா

6,000 வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமத்திற்கு விண்ணப்பிக்க கனடா அழைப்பு விடுத்துள்ளது.

கனடா அரசு, Canadian Experience Class Express Entry திட்டத்தின் கீழ், சமீபத்திய டிரா (Draw No. 384) மூலம் 6,000 வெளிநாட்டு திறமையான தொழிலாளர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமத்திற்கான (Permanent Residency) விண்ணப்ப அழைப்புகளை (ITA) வழங்கியுள்ளது.

இந்த டிரா டிசம்பர் 10, 2025 அன்று நடைபெற்றது. இதில், குறைந்தபட்ச CRS (Comprehensive Ranking System) மதிப்பெண் 520 பெற்றவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம், 2025-ஆம் ஆண்டில் இதுவரை 100,000 இற்கும் மேற்பட்ட ITA-களை கனடா வழங்கியுள்ளது.

Canadian Experience Class (CEC) திட்டம், கனடாவில் ஏற்கனவே வேலை அனுபவம் பெற்றுள்ள வெளிநாட்டு தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் ஒரு வருடம் சம்பளத்துடன் கூடிய திறமையான வேலை அனுபவம் கடந்த 3 ஆண்டுகளில் இருக்க வேண்டும். மேலும், அந்த வேலை அனுபவம் தற்காலிக குடியிருப்பு அனுமதியுடன் கனடாவில் பெற்றிருக்க வேண்டும்.

தன்னார்வ வேலைகள் (Volunteering) அல்லது சம்பளம் இல்லாத இன்டர்ன்ஷிப் அனுபவங்கள் இதில் கணக்கில் கொள்ளப்படாது.

இந்த ஆண்டு டிசம்பர் 10 வரை, 30,850 ITA-கள் கனடாவில் வேலை அனுபவம் கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

IRCC ஒவ்வொரு இரண்டு வாரங்களிலும் டிரா நடத்தி, அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு நிரந்தர குடியுரிமை விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கிறது.

இந்த நடவடிக்கை, கனடா தனது திறமையான தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்யும் முக்கிய முயற்சியாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், மற்றும் பல்வேறு துறைகளில் திறமையானவர்கள், இந்த திட்டத்தின் மூலம் கனடாவில் நிரந்தரமாக குடியேற வாய்ப்பு பெறுகின்றனர்.

## பாரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கை Project Hydrogen எனப்படும் விசாரணையின் ஒரு பகுதி எனவும், இதில் 139 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் டர்ஹாம் பிராந்திய பொலிஸ் சார்ஜெண்ட் பிராட் கார்னர் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த கும்பலின் குற்றச் செயல்கள் டர்ஹாம் பகுதியைத் தாண்டி, வட ஒன்டாரியோ மற்றும் வின்னிப்பெக் வரை பரவியிருந்ததாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அத்தோடு, குற்றக் கும்பலைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாகப் பெற்ற பணத்தை சமூக வலைதளங்களில் வெளிப்படையாகக் காட்டி, குற்றச்செயல்கள் மூலம் செல்வம் பெற்ற கலாச்சாரத்தை



மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின் மூலம் 10 சட்டவிரோத துப்பாக்கிகள், 2.7 மில்லியன் டொலர்மதிப்பிலானபோதைப்பொருள்கள் மற்றும் 200,000 டொலர் கனடிய நாணயம் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இராணுவத்தின் பணிகளுக்காக 6 விமானங்கள் வாங்கும் கனடா

கனடா அரசு Bombardier Global 6500 வகை 6 விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த விமானங்கள், மருத்துவ அவசர வெளியேற்றம், பேரிடர் நிவாரணம், மனிதாபிமான உதவி மற்றும் தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பல்துறை பணிகளில் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

விமானங்கள் Greater Toronto பகுதியில் Bombardier நிறுவனத்தின் Global Aircraft Assembly Centre-ல் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் உட்புற அமைப்புகள் Greater Montreal-ல் நிறைவு செய்யப்படும்.

Royal Canadian Air Force (RCAF), 1983 முதல் Bombardier Challenger விமானங்களை இயக்கி வருகிறது.

இப்போது, Global 6500 விமானங்கள் அதிக தூரம் பறக்கும் திறன் மற்றும் மேம்பட்ட வசதிகளை வழங்குவதால், RCAF-க்கு முக்கிய பலனாக இருக்கும்.

முதல் விமானம் 2027 கோடைகாலத்தில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Bombardier நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி Éric Martel, "இந்த விமானம் உலக தரத்தில் தயாரிக்கப்பட்ட, கனடாவின் பெருமை. பல்வேறு பணிகளைச் செய்யும் திறன் கொண்டதால், உலக அரசுகளின் முதன்மை தெரிவாக உள்ளது" எனக் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம், கனடாவின் வான்வழி மற்றும் பாதுகாப்புத் துறையில் உள்ளூர் சப்ளைச் சங்கிலியை வலுப்படுத்தும். 60-க்கும் மேற்பட்ட கனடிய சப்ளையர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

PwC அறிக்கையின்படி, 2022-ல் Bombardier நடவடிக்கைகள் 518.3 மில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான GDP தாக்கம், 3,747 முழுநேர வேலை வாய்ப்புகள், மற்றும் 309.1 மில்லியன் கனேடிய டொலர் ஊதிய வருமானம் உருவாக்கியுள்ளன.

கனேடிய பாதுகாப்புத் துறை அமைச்சர் Stephen Fuhr, "இந்த ஒப்பந்தம், Defence Investment Agency மூலம் இராணுவ உபகரணங்களை விரைவாக வழங்கும் புதிய மாற்றத்தை குறிக்கிறது. இது வேலை வாய்ப்புகளை உருவாக்கி, புதுமையை ஊக்குவித்து, பாதுகாப்பை வலுப்படுத்தும்" எனக் கூறியுள்ளார்.





## மியான்மர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைக்குத் தப்பி பங்களாதேஷுக்கு ஓடிய ஆயுப் கான் குடும்பத்தை கனடாவுக்கு வர ஸ்பான்சர் செய்துள்ளார் அவரது சகோதரரான நாசிர் கான்.

நவம்பர் மாதம் 5 ஆம் திகதி கனடா வந்தடைந்தது ஆயுப் கான் குடும்பம். ஆயுப் கான் தனது மகளான ஷோமிமாவை (வயது 9) பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயிலுள்ள Newton Elementary School என்னும் பள்ளியில் சேர்த்திருந்தார்.

இந்நிலையில், இம்மாதம், அதாவது, டிசம்பர் மாதம் 5ஆம் திகதி, பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது தன் தந்தையுடன் சாலையைக் கடந்து கொண்டிருந்த ஷோமிமா மீது வேன் ஒன்று மோதியுள்ளது.

வான் மோதியதில் ஷோமிமா உயிரிழந்துள்ளார். வானின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

உயிருக்கு பயந்து சொந்த நாட்டிலிருந்து தப்பி இன்னொரு நாட்டில் அகதிகளாக வாழ்ந்து, அங்கிருந்து ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததால் கனடாவுக்கு வந்து ஒரு புதிய வாழ்வைத் துவங்கலாம் என்ற சந்தோஷத்தில் இருந்த கான் குடும்பம், தற்போது, மகளை இழந்து துயரத்தில் ஆழ்ந்துள்ளது.